**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.154/2019**

**2023ம்** வருடம் நவம்பர் மாதம் **06 ஆம்** நாள் வாதிகள் தரப்பு சாட்சியான வ.**சா.2** ன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :சேசுராஜ் | ஜாதி | : |
| த/பெ. | :மதலைமுத்து | தொழில் | : கூலிவேலை |
| கிராமம் | :ஆலமரத்துப்பட்டி | மதம் | : |
| தாலுகா | : ஆத்தூர் | வயது | : 56/2023 |
| தேதி | : 06.11.2023 | | |

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதியாவேன். வாதி தரப்பு 1வது சாட்சியாவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். 22.06.1956 தேதியிட்ட செம்புலிங்கம் செட்டியார் பெயரிலுள்ள சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 02.01.1956 தேதியிட்ட செம்புலிங்கம் பெயரிலுள்ள கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 19.04.1999 தேதியிட்ட வாதியாகிய எனது பெயரிலுள்ள கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகவும், 20.06.2005 தேதியில் 1வது பிரதிவாதி 2வது பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆகவும், 03.01.2018 தேதியில் 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆகவும், 11.04.2009 தேதியிட்ட வருவாய் கோட்டாட்சியரின் ஆர்ஜித உத்தரவு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆகவும், 07.09.2019 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.7 ஆகவும், 10.09.2019 தேதியிட்ட சார் பதிவாளரின் பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.8 ஆகவும், 20.09.2019 தேதியிட்ட 3வது பிரதிவாதியின் பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.9 ஆகவும், 1வது பிரதிவாதியின் பிராது O.S.No.250/2011 இன் பிராது சார்பு நகல் வா.சா.ஆ.10 ஆகவும், 10.09.2018 தேதியில் மேற்கண்ட O.S.No.250/2011 தாவாவில் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பும் தீர்பாணையும் பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**1வது மற்றும் 2வது பிரதிவாதிகள்** தோன்றாதரப்பினர்கள்.
**3**வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

P JAISANKAR — Digitally signed by P JAISANKAR

District Munsif cum Judicial Magistrate,
Athoor.